**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 3
Defence
Court

Name : இசக்கிமுத்து என்ற கேபிள் முத்து

Father's/Husband Name : இசக்கிதேவர்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24th August 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசி, மலையான் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவத்தன்று நான் வெளியூர் சென்றிருந்தேன். ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து மறுநாள் தான் எனக்கு தெரியும். சம்பவத்தன்று என்ன நடந்தது என்று எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை பொருத்து கேள்விபட்டேன் என்பதை தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது.

இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

திருநெல்வேலி மாவட்டம் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக தலைவர் மைதீன் சேக்கானை கொலை செய்ய முயற்சி செய்ததாக குமார்பாண்டியன் தம்பி செந்திலும், அவரது நண்பர்களும் கைது செய்யப்பட்டார்கள் என்றும் அதனால் முன்விரோதம் இருந்தது என்றும், கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. கடந்த 14.08.2007 ம் தேதி காலை நானும் என் நண்பர்கள் சேகர், சுரேஷ், மாலையப்பன், அலெக்ஸாண்டர், சண்முகம், பிஸ்தாமணி, ஆபிரகாம், பிரபு, தட்சிணாமூர்த்தி ஆகியோர்களும் தென்காசி கூளக்கடை பஜாரில் எல்.ஆர்.எஸ் பாளையம் ஜங்சனில் நின்று கொண்டிருந்தோம் என்றும், காலை சுமார் 10.15 மணிக்கு தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டு விட்டு கூளக்கடை பஜாரில் ஹனிபாவும் அவர்களது கூட்டாளிகளும் ஆட்டோக்களில் கிழக்கு பார்த்து வேகமாக போனார்கள் என்றும், அவர்களுக்கு முன்னால் அலாவூதீன் TN 72 X 0558 என்ற மோட்டார் சைக்கிளில் வேகமாக போனார் என்றும், மேல முத்தாரம்மன் கோவில் பக்கம் போன போது அலாவூதீன் எதிரே சக்திபாண்டியன் ஓட்டி வந்த அம்பாஸ்ட்டர் காரில் மோதி வழிமறித்து நிறுத்தினார்கள் என்றும் அதனால் சக்திபாண்டியனும் அவரது கூட வந்தவர்களும் காரை விட்டு இறங்கி கிழக்கு பார்த்து ஓடினார்கள் என்றும் அங்கே சிலர் அவர்களை வழிமறித்ததால் மீண்டும் அவர்கள் மேற்கு பக்கம் பார்த்து ஓடினார்கள் என்றும் அவர்களை ஹனிபா, முருகேசன் என்ற அப்துல்லா, அலாவூதீன் மற்றும் அவர்களது கூட்டாளிகளான அசன்கனி, ராஜா முகமது, சையது அலி, நவாஸ், மேசாக், மற்றும் அவர்களது கூட்டாளிகளும் ஆயுதங்களுடன் விரட்டி குத்தி தாக்கினார்கள் என்றும், பதிலுக்கு குமார்பாண்டியன் தம்பிகளான சேகர், சுரேஷ், செந்தில் மற்றும் அவர்களது நண்பர்கள் தாக்கினார்கள் என்றும் அதில் ஹனிபா அருவாளால் சேகரின் தலையில் மாறி மாறி வெட்டினார் என்றும், முருகேசன் என்ற அப்துல்லா அருவாளால் சேகரின் வலது முழங்கை, இடது முழங்கை, இடது விலா ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும், அசன்கனி கத்தியால் சேகரின் வலது கக்கத்தற்கு கீழ் குத்தியும், ராஜா முகமது அருவாளால் சேகரின் வலது காதுக்கு கீழும், வலது உள்ளங்கையிலும் வெட்டினார் என்றும், செந்திலை அலாவூதீன் அருவாளால் தலையின் இடது பக்கம், காதோடு சேர்த்து வலது கண்புருவத்திற்கு மேலும் வெட்டினார் என்றும், சுரேசை சையது அலி பட்டாக்கத்தியால் முகத்தோடு சேர்த்து தலையுடன் வெட்டினார் என்று மேற்படி விவரங்கள் அனைத்தையும் நடந்த சம்பவங்களை பற்றியும் போலீசார் விசாரைணயில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை